

சென்னை வண்ணாரப்பேட்டை டி.எம்.எஸ்.– மெட்ரோ ரெயிலில் அமைச்சர்கள் ஜெயக்குமார், எம்.சி. சம்பத் மற்றும் அதிகாரிகள் பயணம் செய்தார்கள்.

### மெட்ரோ ரெயிலில் இலவச பயணம்

# ஆடிப் பாடி மகிழ்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள்!

சென்னை,பிப்.11

சென்னை மெட்ரோ ரெயிலில் இன்று இலவசமாக பயணிகள் அனுமதிக்கப்பட்டதைஅடுத்துபள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள்உள்ளிட்டோர்ஆட்டம். பாட்டத்துடன் இந்த மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கட்டுக்குள்கொண்டுவரஅரசுபல்வேறுநடவடிக்கைகளைஎடுத்துவருகிறது. அதன்ஒருகட்டமாககடந்த 2007–ம் ஆண்டு மெட்ரோ ரெயில் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் படி சென்னை விமான நிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்திலும் சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை 2–வது வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் சேவைக்கானபணிகள்முடிவடைந்தன.

**தொடக்கவிழா**

இதையடுத்து இந்த இரண்டு மார்க்கத்திலும் மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியது. இதனிடையே டி.எம்.எஸ். வண்ணாரப்பேட்டைஇடையே பணிகள்மும்முரமாகநடைபெற்று முடிவடைந்தது. இந்தமார்க்கத்தில்மெட்ரோ ரெயில் சேவையை நேற்று மாலை பிரதமர் மோடி, கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல் அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் முன்னிலையில் தொடங்கிவைத்தார்.

மக்கள் மத்தியில் மெட்ரோர் ரெயிலை பிரபலப்படுத்துவதற்காக கோயம்பேடு – ஆலந்தூர், சென்ட்ரல் விமான நிலையம் ஆகிய மார்க்கங்களில் முதன் முதலாக மெட்ரோ ரெயில் போக்குவரத்து தொடங்கியபோது இலவச பயணம் அளிக்கப்பட்டது. பொது மக்களும் இலவசமாக பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்தனர். அதே போல் இன்று முழுவதும் வண்ணாரப்பேட்டை, டி.எம்.எஸ். இடையேஇலவச சேவை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை மக்கள் தொடர்பு துணை இணை இயக்குனர் எஸ்.பாண்டியன் அறிவித்துள்ளார்.

**இலவச பயணம்**

இதையடுத்து இன்று காலை முதல் மெட்ரோ ரெயிலில் மக்கள் ஆர்வத்துடன் இலவசமாக பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்தனர். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் ஆட்டம். பாட்டத்துடன் இந்த மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது.



தமிழக அரசுப் பேருந்துகளில் இருப்பதுபோல சென்னை மெட்ரோர் ரெயிலிலும் திருக்குறள் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு உள்ளதை படத்தில் காணலாம்.